-5-

**சென்னை – 28 கூடுதல் தலைமைச் செயலாளர்/பயிற்சித் துறைத் தலைவரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர்: திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,**

**செ.மு.ஆ.எண்.பதுத /544/அ2/2022**

**நாள் :18.06.2024**

பொருள்: பணியமைப்பு – கருணை அடிப்படை நியமனம் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஜெசிந்த் பிரியா (திருமதி) பீ., த/பெ. (லேட்) திரு. சு. பீட்டர் தேவதாஸ் - பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம் – இளநிலை உதவியாளராக பணி நியமனம் 09.09.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

படிக்க :

1. தலைமைச் செயலாளர் மற்றும் பயிற்சித் துறைத் தலைவரின் செயல்முறை ஆணை எண். பதுத/ 544/ 2022/ நாள்: 30.08.2022.
2. அரசு ஆணை எண்.33 , தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 08.03.2023

*******

**ஆணை :**

பயிற்சித் துறைத் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 'அ' மற்றும் 'ஆ' பிரிவு அடிப்படை பயிற்சி நிலையத்தில் அலுவலக உதவியாளராகப் பணிபுரிந்த திரு. சு. பீட்டர் தேவதாஸ் 15.10.2021 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது வாரிசுதாரர் திருமதி. பீ. ஜெசிந்த் பிரியா, என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கக் கோரியதன் பேரில் பார்வை ஒன்றில் காணும் செயல்முறை ஆணையில் திருமதி. பீ. ஜெசிந்த் பிரியா அவர்கள் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். தனியர் 09.09.2022 முற்பகல் ஊதியநிலை-8, கலம்-1ல் ரு.19,500/- என்ற அடிப்படை ஊதியத்தில் மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வழிகாட்டுதல்களின்படி உரிய ஆவணங்களுடன் நன்கு ஆய்வு செய்து, அரசாணையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருமதி. பீ. ஜெசிந்த் பிரியா பூர்த்தி செய்துள்ள நிலையில் அவரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகத்தில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 09.09.2022 முற்பகல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால் தனியரின் ஆண்டு ஊதிய உயர்வு/ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் அவற்றை விதிகளின்படி பெற தகுதியுடையவராகிறார்.

மேலும், திருமதி .பீ. ஜெசிந்த் பிரியா, அவர்கள் பணியேற்ற 09.09.2022 முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் தொடங்கியும் ஆணையிடப்படுகிறது.

ஒம் /- விக்ரம் கபூர்
கூடுதல் தலைமைச் செயலாளர்/
பயிற்சித் துறைத் தலைவர்

பெறுநர்
திருமதி . பீ. ஜெசிந்த் பிரியா,
இளநிலை உதவியாளர்,
பயிற்சித் துறைத் தலைவர் அலுவலகம், சென்னை-28
நகல்:
இருப்புக் கோப்பு.

20/6/24

பயிற்சித் துறைத் தலைவருக்காக

20/6/2024